பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: தை 19 (2—2—68) வெள்ளி :★ வெளியூர்: தை 20 (3—2—68) சனி [இதழ்: 192

மதுரைப் பல்கலைக்கழகத் தேர்வு

மதுரை, பிப். 1—
"மதுரைப் பல்கலைக் கழகத்தின் பல்வேறு தேர்வுகளும் நடைபெறுவதற்கான நாட்கள், பிப். 17-ஆம் நாள் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுக் கூட்டம் நடைபெறும்போது அறிவிக்கப்படும்" என்று துணைவேந்தர் இன்று அறிவித்தார்.

நகரிலுள்ள எல்லாக் கல்லூரிகளின் முதல்வர்களையும் இன்று கூட்டி, கல்லூரிகளில் தமிழைப் பயிற்றுமொழியாக்குவது பற்றியும், இவ்வாண்டுப் பாடத் திட்டத்தை முடிக்கும் பிரச்சினை குறித்தும் துணைவேந்தர் விவாதித்தார்.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி எதிரொலி

புதுவைப் பள்ளிக் கல்லூரிகள் மூடப்பட்டுவிட்டன

புதுவை, பிப். 2—
புதுவையில், தனியார் பள்ளிகள் உட்பட எல்லாக் கல்வி நிறுவனங்களும், காலவரையின்றி மூடப்பட்டுவிட்டன.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை மாணவர்கள் மேற்கொண்டிருப்பதனால், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கடப்பையில் தடையுத்தரவு

ஐதராபாத், பிப். 2—
ஆந்திர மாநிலத்தில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி தொடர்ந்து நடைபெறுவதையொட்டி, கடப்பை நகர எல்லைக்குள் கூட்டமோ, ஊர்வலமோ நடத்தக் கூடாது எனத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இரயில் நிறுத்தம்—உண்ணாநோன்பு

ஆந்திராவில் பல மாவட்டங்களிலும் இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டுள்ள மாணவர்கள், இரயில்களை நிறுத்தியுள்ளனர்.

வால்டேரில், பல்கலைக் கழக வாயிலில் உண்ணாநோன்பு மேற்கொள்ளும் பணியில் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர்,

'இரு மொழித் திட்டத்தை நிறைவேற்றுவது அவசியம்'

ஆந்திர மாணவர் உறுதி

"இரு மொழித் திட்டத்தை (தெலுங்கு, ஆங்கிலம்) சிபாரிசு செய்யும் தீர்மானத்தை ஆந்திரச் சட்டமன்றம் நிறைவேற்றும்வரையில், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை நிறுத்துவதற்கில்லை"

என்று, மாணவர் மன்றத்தைச் சேர்ந்த ஒருவர் கூறியுள்ளார்.

கல்லூரி திறந்தும் மாணவர்கள் வரவில்லை!

திருப்பதி, பிப். 1—
திருப்பதி வெங்கடேசுவரப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கல்லூரிகள் இன்று திறக்கப்பட்டன; ஆனால், மாணவர்கள் வகுப்புக்களுக்குச் செல்லவில்லை.

வெங்கடேசுவரா உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் மட்டும் காலையில் வகுப்புக்களுக்குச் சென்றனர்; பிற்பகல் அவர்களும் திங்கட்கிழமைவரை வேலை நிறுத்தம் செய்ய முடிவு செய்தனர்.

முதலமைச்சர் வேண்டுகோள்

மாணவர்கள், முதலமைச்சர் திரு. பிரம்மானந்த ரெட்டியைத் திருச்சானூரில் கண்டு மொழிப் பிரச்சினைபற்றிப் பேசினர்.

மும்மொழித் திட்டத்தால், மாணவர்களின் எதிர்கால வேலைவாய்ப்புப் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்வதாக முதலமைச்சர் உறுதிமொழியளித்தாராம். மொழிப் பிரச்சினையைத் தலைவர்களிடம் விட்டுவிட்டு வகுப்புக்களுக்குச் செல்லுமாறு அவர் மாணவர்கட்கு அறிவுறுத்தினார்.

மங்களூரில் தடையுத்தரவு

மங்களூர், பிப். 1—
இன்றும் இங்கு இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி தொடர்ந்து நடைபெற்றது. அரசினர் கல்லூரி முன் கூடியிருந்த 500-க்கு மேற்பட்ட மாணவர்களைக் கலைக்கப் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர். இதனால் இரண்டுபேர் காயமடைந்தனர்.

அரசினர் கல்லூரி, செயின்ட் அலாய்சியஸ் கல்லூரி, கருநாடக பாலிடெக்னிக், மற்றும் உயர்நிலைப் பள்ளிகள் அனைத்தும் இன்று ஓய்ந்துகிடந்தன.

இன்று காலை, போலீசார் குடியிருக்கும் பகுதியில் கற்கள் வீசப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மங்களூர் நகர எல்லைக்குள் 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தெ.ஆ. பிரதிநிதிகளை வெளியேற்றுக!

ஐ. நா. மாநாட்டு வாயிலில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, பிப். 1—
இங்கு அசோகா விடுதியில் இரண்டாவது ஐ. நா. வணிக வளர்ச்சி மாநாட்டின் துவக்க விழா நடைபெற்றபோது, டில்லிப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 30 ஆப்பிரிக்க மாணவர்களும்—50 இந்திய மாணவர்களும் விழா நடந்த கட்டிட வாயிலில் நின்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்த மாநாட்டில் தென்னாப்பிரிக்கப் பிரதிநிதிகள் கலந்துகொள்வதை எதிர்க்கவே அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

'நிறவெறி ஒழிக'—'அமெரிக்கக் கெடுபிடி ஒழிக' — 'ஆப்பிரிக்கா எங்களுக்கே'—'போயர் பண்ணைக்காரர்களே — வெளியேறுங்கள்' என்றெல்லாம் அவர்கள் முழக்கமிட்டனர்.

உ. பி. மாநிலத்துக்குப் புதிய முதலமைச்சர்

சரண் சிங் விலகல் உறுதி

லக்னோ, பிப். 1—
உ. பி. மாநிலத்தின் ஆளுங்கட்சியான சம்யுக்த விதாயக் தளத்தின் புதிய தலைவர் தேர்தலைத் தற்சமயத்துக்கு ஒத்திவைப்பது என்று இன்று முடிவு செய்யப்பட்டது.

உ. பி. ஆளுங்கட்சித் தலைவர் பதவியிலிருந்து முதலமைச்சர் சரண் சிங் விலகிவிட்டதை முன்னிட்டு ஆளுங்கட்சியின் கூட்டுக் குழு இன்று கூடியது.

முதலமைச்சர் பதவியிலிருந்து விலகிவிடுவது என்ற தமது முடிவை திரு. சரண் சிங் மாற்றிக்கொள்வதாகத் தெரியவில்லை. பிப். 8-ம் நாளுக்குள் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்குமாறு அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

வலது கம்யூனிஸ்டு ஆளுங் கட்சியானால்...!

கட்சித் தலைவர் எஸ். ஏ. டாங்கே வெளியிடும் தகவல்

விஜயவாடா, பிப். 1—
தமது கட்சி இந்தியாவின் ஆளுங் கட்சியாக அமர்ந்தால் என்னென்னவெல்லாம் நடக்கும் என்று தெரிவித்திருக்கிறார்—வலதுசாரிப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஏ. டாங்கே.

ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த எல்லூருவில் அண்மையில் நடந்த தமது கட்சியின் குழுக் கூட்டத்தில் பேசுகையில் திரு. டாங்கே தெரிவித்ததாவது:—

'ஒரு பாலம் உடைந்து அதனால் ஒரு தொழிலாளி மடிய நேரிட்டால், அந்தப் பாலத்தைக் கட்டிய காண்டிராக்டர் மீது கொலைக் குற்றஞ்சாட்டப்பட்டு—ஒரு மக்கள் மன்றத்தில் விசாரிக்கப்பட்டு—அந்த இடத்திலேயே சுட்டுக் கொல்லப்படுவார்!

"'இலாபம் கிடைக்கவில்லை' எனக் கூறி ஓர் ஆலையை மூடினால், அந்த ஆலை முதலாளியைப் பிடித்துச் சிறையில் தள்ளி, தொழிலாளர்களிடம் அவர் சுரண்டிய பணத்தையெல்லாம் ஒவ்வொரு காசாக வாங்கியெடுக்கும்வரையில் கடுமையான வேலை வாங்குவோம்!

"எங்களுடைய இந்த இலட்சியத்தை நிறைவேற்ற இரண்டொரு தடங்கல்கள் இருக்கின்றன; அவற்றில் ஒன்று மார்க்சியக் குழுவினர் (இடது கம்யூனிஸ்டுக் கட்சி)"

உ. பி. அரசுக்கு மேற்கு வங்கப் போலீசுத் துறை கற்பித்த பாடம்!

இந்தியில் வந்த கைது வாரண்டைத் திருப்பி அனுப்பினர்!

நிலைமை உணர்ந்து வழிக்குவந்தார் மாஜிஸ்திரேட்

வாரணசி, பிப். 2—
உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள பாலியா மாவட்டத்தைச் சேர்ந்த மாஜிஸ்திரேட் ஒருவர், போலீசால் தேடப்படும் ஒரு நபரைப் பிடிப்பதற்காக, மேற்கு வங்கப் போலீசுக்கு ஒரு வாரண்டு அனுப்பினார்; அந்த வாரண்டு இந்தியில் இருந்ததால் அதை மேற்கு வங்கப் போலீசார் ஏற்க மறுத்து, அனுப்பியவருக்கே திருப்பியனுப்பிவிட்டனர்!

பின்னர் அந்த மாஜிஸ்திரேட், அந்த வாரண்டிற்கான ஆங்கில மொழி பெயர்ப்பை அனுப்பினார்; 'வாரண்டுடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் வைத்தனுப்ப வேண்டும்' என்று மாநில அரசு அறிவுறுத்தவில்லை என்றபோதிலும், 'தேடப்படுகிற ஆளை எப்படியும் பிடிக்க வேண்டும்' என்பதற்காகவே தாம் ஆங்கில மொழி பெயர்ப்பை அனுப்புவதாகவும் அவர் விளக்கமளித்துள்ளார்.

இந்தி வாரண்டைத் திருப்பி அனுப்பியவர், அவுரா மாவட்டப் போலீசு சூப்பரின்டெண்டு ஆவார்.

பல்வேறு கொள்ளை வழக்குகளில் சம்பந்தப்பட்ட ஒரு பேர்வழி, அவுரா மாவட்டம் மாலி பச்சாகரர் போலீசு சரகத்தில் வசித்துவருவதாகத் தகவல் கிடைத்து, அவனைக் கைது செய்யவேண்டும் என்பதற்காக அந்த வாரண்டு பிறப்பிக்கப்பட்டது.

மாநகராட்சிப் பள்ளிகள்

பிப். 5-ல் திறக்கப்படும்

சென்னை, பிப். 2—
பிப். 5-ந் தேதியன்று பள்ளிகள் அனைத்தையும் திறப்பதெனத் தமிழக அரசு முடிவு செய்துள்ளதையொட்டி, மாநகராட்சிப் பள்ளிகளும் அன்றே திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திட்டக் குழுவுடன் நிதித்துறை பிணக்கு?

தொகை ஒதுக்குவதில் இறுக்கிப் பிடிக்கிறார் மொரார்ஜி

கருத்து வேற்றுமையைக் களைய மூலவர் மூவர் கூடிப் பேசுவர்

புதுடில்லி, பிப். 2—
திட்டக் குழுவுக்கும்—நிதி அமைச்சகத்துக்குமிடையில் நிலவும் கருத்து வேறுபாடு காரணமாக, 1968–69-ம் ஆண்டுக்கான திட்டத்தை இறுதியாக்கும் பணி சுணக்கமாவதாகத் தெரிகிறது.

"1968–69-க்கான திட்டத்துக்குக் குறைந்த அளவு ரூ. 2,246 கோடியாவது ஒதுக்கவேண்டும்" என்று திட்டக் குழு வற்புறுத்துகிறது; ஆனால் நிதியமைச்சகம் 'ரூ. 1,800 கோடிக்குமேல் ஒதுக்கமுடியாது' என்று கருதுகிறதாம்.

இத்தொகையில் மாநிலங்கட்கு மத்திய அரசு அளிக்கும் உதவியும் அடங்கும்.

திட்டத்தின் அளவைப் பற்றிய கருத்து என்பதைச் சுட்டிக்காட்டி, தலைமையமைச்சர் இந்திரா காந்தி, துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி, திட்டக் குழுத் துணைத் தலைவர் காட்கில் ஆகிய மூவரும் கலந்துபேசி ஒரு முடிவுகாண வேண்டும் என்று முடிவாயிற்று.

பொருட்காட்சிக்குத் தீவுத் திடலிலிருந்து விமானம்

திட்டம் நிறைவேற டெல்லி ஒத்துழைக்குமா?

மதுரை, பிப். 2—
"சென்னையில் நடக்கும் உலகப் பொருட்காட்சிக்கு சென்னை தீவுத் திடலிலிருந்து விமானம் மூலம் பார்வையாளர்களை ஏற்றிச் செல்லும் தங்கள் திட்டம் எப்படியும் நிறைவேறும்" என்று, பொருட்காட்சிப் பொறுப்பாளர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

தீவுத் திடலை இதற்குப் பயன்படுத்துவதற்காக ரூ. 14,000 வாடகை தரவேண்டும் என்று இந்தியப் பாதுகாப்புத் துறை நிபந்தனை விதித்தது. (இத்திடல் பாதுகாப்புத் துறைக்குச் சொந்தமானதாகும்)

இந்த வாடகையிலிருந்து விலக்களிக்குமாறு பொருட்காட்சி நடத்துவோர் கோரியிருந்தனர்; உலகத் தமிழ் மாநாட்டுக்கு இத்திடல், கட்டணமின்றி அளிக்கப்பட்டதையும் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

எனவே, அவர்களின் கோரிக்கைக்கு ஆதரவான பதில் டெல்லியிலிருந்து வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

இதற்காக, கல்கத்தாவில் உள்ள ஒரு தனியார் கம்பெனியிடமிருந்து 'அஸ்டார்' என்னும் ஒரு சிறிய விமானத்தை மிகவும் நியாயமான விலைக்கு வாங்குவதற்கான பேரம் பெரும்பாலும் முடிந்துவிட்டதாக பொருட்காட்சி அதிகாரிகள் கூறுகின்றனர்.

பாதுகாப்புத்துறை அமைச்சகம், தீவுத் திடலுக்கான வாடகையை விட்டுக் கொடுக்குமானால், பொருட்காட்சி முடிவடைய இன்னும் எஞ்சியிருக்கும் நாட்களிலாவது விமானப் போக்குவரத்தை நடத்தவாய்ப்பு இருக்கிறது.

நம்நாடு

இரா.செழியன்

திருவள்ளுவராண்டு 1999 தை 19 (2—2—68) வெள்ளி

தியாகத்துக்கு அண்ணு காணிக்கை

இந்தியத் துணைக்கண்டத்தின் அரசியல் சுதந்தரத்துக்காக முன்னணியிலிருந்து போராடி பலரின் பெயரை, இன்று மக்கள் மறந்தேவிட்டனர். இதற்காக மக்களைக் குற்றஞ்சொல்வதில் பயனில்லை.

தீவிரமாக ஏற்பட்டுவருகின்ற மாற்றங்களும், அடுத்தடுத்துத் தொடர்ந்தாற்போல் தலைதூக்கிக்கொண்டே இருக்கின்ற புதுப் புதுப் பிரச்சினைகளும், நாள்தவருமல் மக்கள் கவனத்தை ஈர்த்துக் கொண்டுள்ளன. இவ்வாறு மக்கள் நினைப்பெல்லாம் புதுப் பிரச்சினைகளைச் சுற்றி வட்டமிட்டுக்கொண்டிருப்பதால், பழைய வரலாறுகளையும், அவ்வரலாறுகளை உருவாக்கத் தங்கள் உடல் - பொருள் - ஆவி மூன்றையும் அர்ப்பணித்துவிட்டவர்களையும், தங்களையும் அறியாமலே மக்கள் மறந்துவிடுகின்றனர். ஆனல், மறந்துபோன வீரத் தியாகிகளைக் குறித்து நினைவுபடுத்தினல், தங்கள் இதயத்தின் ஆழத்தில் எங்கோ இடம் பெற்றிருக்கின்ற அந்த விடுதலை வீரர்களை மீண்டும் நினைத்துக்கொள்வதுடன், அவர்களுக்கு வீர வணக்கமும் செலுத்தி, அவர்கள் வாழ்க்கையைப் பின்பற்றத்தக்க படிப்பினையாகவும் மக்கள் கொள்ளத் தயங்குவது கிடையாது.

நாட்டு விடுதலைக்காகப் போராடியவர்களாயினும் சரி—கொடுமைகளுக்கு எதிராகப் போர் புரிந்தவர்களாயினும் சரி—கொண்ட கொள்கைக்காகத் தங்கள் வாழ்வைப் பலியிட்டுக்கொண்டவர்களாயினும் சரி—அவர்கள் அனைவரும் மக்களின் பாராட்டுதலுக்கு உரியவர்களேயாவர். அத்தகைய வீரர்களின் வாழ்க்கை வரலாறு மக்கள் பின்பற்றத்தக்க விழுமிய வழிகாட்டியாகும்.

நாட்டு விடுதலைக்காகவும், கொடுமைகளைக் களைவதற்கும் மக்களின் நல்வாழ்வுக்காகவும் தங்களுடைய இன்ப துன்பங்களைப் பொருட்படுத்தாமல் வாழ்நாள் முழுவதும் உழைத்தவர்கள் வரிசையில் வைத்து ஏற்றிப்போற்றிப் பாராட்டப்பட வேண்டியவர் ஆந்திர கேசரி பிரகாசம் பந்துலுகாரு அவர்களாவார். அவர் ஆந்திரர் என்ருலும், இன்றையத் தமிழகத்தின் தலைநகரமாக உள்ள சென்னை நகரத்திலிருந்தே அவர் விடுதலை உணர்வை மக்களுக்கு ஊட்டி வந்தார்.

சூதுவாது அறியாத அரசியல் தலைவர் அவர். வழக்குரைஞராக இருந்து நல்ல வருமானத்தைத் தேடிவந்த அவர், காந்தியாரின் நாட்டு விடுதலைப் படையில் சேர்ந்து, தளபதிகளில் ஒருவரானர்.

அரிமா முழக்கமாகத்தான் இருந்திடும் அவர் பேச்சு. அவர் எழுத்தும், ஈட்டிபோல் கூர்மையானதே ஆகும்.

'சுயராஜ்யா' என்ற ஆங்கில நாளிதழின் ஆசிரியராக இருந்து அவர் சுதந்தரக் கனலை மூட்டிவந்தார். அவ்விதழை நடத்திவருவதிலேயே தமது சொத்தையெல்லாம் இழந்தார். இன்னும் அவரைக் குறித்து எவ்வளவு பாராட்டினுலும், அதற்கு அவர் உரியவரேயாவார்.

துப்பாக்கியால் சுடுகின்றபொழுது மார்பைக் காட்டுவது என்பார்களே—அந்த வீரச் செயலைச் செய்து காட்டியவர் ஆவார் பிரகாசம் அவர்கள். சைமன் கமிஷன் பகிஷ்காரத்தின்போது சென்னை நகரத்தில் தடையுத்தரவு விதிக்கப்பட்டிருந்தது. உயர் நீதி மன்றத்தருகில், அத்தடையை மீறினர் பிரகாசம்; அப்பொழுது, 'கூட்டத்தைக் கலைக்க சுடப்படும்' என எச்சரிக்கப்பட்டது. அந்த எச்சரிக்கையைக் கேட்டதும், தம் மார்பைக் காட்டி, 'இங்கே சுடுங்கள்' என அன்றிருந்த ஆங்கிலத் துரைத்தனத்திடம் முழக்கமிட்டவர் ஆந்திரகேசரி பிரகாசம் அவர்கள்.

அத்தகைய மாவீரருக்கு—விடுதலைப் போர் வீரருக்கு—ஏற்றதோர் நினைவுச் சின்னம் இதற்குள்ளாக அமைத்திருத்தல் வேண்டும். அதற்குரிய கடமையுடைய காங்கிரசுக் கட்சி, சென்ற ஆண்டு இறுதிவரை கனவில்கூட அதுபற்றிக்கருதாமல் இருந்து வந்திருக்கிறது.

ஆனல், இருந்தாற்போல் இருந்து, இவ்வாண்டுத் துவக்கத்தில் ஐதராபாத் நகரில் நடைபெற்ற அனைத்து இந்திய காங்கிரசு மாநாட்டின்பொழுது, தலைவர் பொறுப்பிலிருந்து விலகுகின்ற நோத்தில், காமராசர் அவர்களின் நினைப்பு ஆந்திர கேசரியின்மீது விழுந்தது. சென்னை உயர் நீதிமன்ற வெளியில் ஆந்திரகேசரி பிரகாசம் அவர்களுக்குச் சிலை அமைக்கவேண்டும் என்பதுதான், தமது வாழ்நாளில் கொண்டுள்ள ஒரே ஒரு ஆசை எனக் கூறினர்.

1954-ம் ஆண்டிலிருந்து 1964-ம் ஆண்டு வரையில் தமிழகத்தின் முதலமைச்சராகத் தாம் இருந்த நேரத்தில், எந்த ஒரு நிமிடத்திலும் தமக்கு ஏற்பட்டில்லாத ஆசை—'சென்னையில் பிரகாசத்துக்குச் சிலை எழுபபவேண்டும்' என்ற ஆசை—'காங்கிரசுத் தலைவர்' என்ற பதவியையும் துறக்கின்ற நேரத்தில் காமராசர் அவர்களுக்கு ஏற்பட்டது, வியப்பளிக்கக்கூடியதுதான். தமிழகமும் ஆந்திரமும் இணைந்திருந்த அன்றையச் சென்னை மாகாணத்தில் காங்கிரசு, அரசு அமைத்தபொழுது, அவ்வரசில் முதலமைச்சராக இருந்த ஆந்திரகேசரி பிரகாசம் அவர்களை, அப்பொறுப்பிலிருந்து வெளியேற்றிய தம் திருப்பணிக்குக் கழுவாய் தேடிக்கொள்ளத்தான், பிரகாசத்துக்கு சிலை அமைக்கும் ஆசை காமராசர் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் போலும்! காமராசருக்கு ஏற்பட்ட ஆசைக்கான காரணத்தை மேலும் ஆராய நாம் விரும்பவில்லை.

இப்பொழுது இன்றையத் தமிழக அரசு, சென்னை உயர் நீதி மன்றத்தின் முன் ஆந்திரகேசரி பிரகாசம் அவர்களுக்குச் சிலை அமைக்க முடிவு கட்டியுள்ளது. தம் ஆந்திர உலாவின்பொழுது தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் 'பிரகாசம் அவர்களுக்குச் சிலை அமைக்கப்படும்' என்ற நல்முடிவை அறிவித்துள்ளார்.

சென்னை மாநகராட்சியும், பிரகாசம் அவர்களுக்கு உயர் நீதி மன்ற வெளியில் சிலை அமைப்பது பற்றித் தீர்மானித்திருக்கிறது.

சுதந்தரம் வாங்கித்தந்தவர்கள் தாங்கள்தான்—தாங்களேதான் என எடுத்ததற்கெல்லாம் ஒப்பாரி வைத்து ஓட்டுப் பிச்சை கேட்டுக்கொண்டிருக்கின்ற காங்கிரசுத் தலைவர்கள், 'நாட்டு விடுதலைக்காக வீரப் போர் புரிந்து மறைந்துபோன மாவீரருக்குச் சிலை எழுப்பி மரியாதை செலுத்த வேண்டும்' என்ற தங்களுக்குரிய கடமையைக் கடந்த இருபதாண்டுக்காலமாக மறந்து காலங்கழித்து வந்தார்கள். ஆனல், அதே காங்கிரசுத் தலைவர்களால் இழித்துப் பழித்துப் பேசம்பட்டுவருகின்ற அறிஞர் அண்ணு அவர்கள் 'முதலமைச்சர்' என்ற நிலையில் நின்று, கட்சிக் கண்ணேட்டத்தை ஒதுக்கித்தள்ளிவிட்டு, உண்மையான விடுதலை வீரரான பிரகாசம் அவர்களை மதிக்கவும், அதற்கு அறிகுறியாக வெண்கலச் சிலை ஒன்றை அமைக்கவும், நாட்டு மக்களுக்கு அந்த உத்தமர் செய்த தொண்டை நினைவுபடுத்தவும் முன்வந்துள்ளார்.

உண்மையான விடுதலை வீரர்களை மதிக்கும் பெருங்குணமும் பண்பும் தமக்கு இயல்பாகவே உண்டு என்ற உண்மையை, ஆந்திர கேசரி பிரகாசம் பந்துலுகாரு அவர்களுக்கு சென்னை உயர் நீதி மன்ற வெளியில் வெண்கலச் சிலை அமைக்கத் தீர்மானித்திருப்பதன் வாயிலாக உறுதிப்படுத்தியுள்ளார். அமைக்கப்படக்கூடிய அம்மாவீரன் சிலையின் கீழ் சைமன் கமிஷன் பகிஷ்காரத்தின் போது, துப்பாக்கிக்கு ஆந்திரகேசரி அவர்கள் தம் மார்பைக் காட்டிய நிகழ்ச்சியும் பொன்னெழுத்துக்களால் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றே நாம் நம்புகிருேம்.

—கா. க.

வாக்காளர்களை வண்டிகளில் ஏற்றிவருவது குற்றம்

உரியநேரத்தில் முறையீடு செய்ய அறிவுறுத்தல்

வாக்குச் சாவடிக்குச் செல்ல அல்லது அங்கிருந்து வீடு திரும்ப வாக்காளர்களுக்குச் சில வேட்பாளர்கள் வண்டிகள் ஏற்பாடு செய்வதாகவும், அதன் மூலம் அவர்கள் வாக்கு அளிக்குமாறு தூண்டுவதாகவும் தேர்தல் கமிஷனுக்கு அடிக்கடி புகார்கள் வருகின்றன; குறிப்பாகப் பொதுத் தேர்தல் அல்லது இடைத் தேர்தல் காலத்தில் இவ்வாறு வருகின்றன.

வேட்பாளரோ அல்லது அவரது ஏஜெண்டோ, அல்லது அவர்களது இசைவு பெற்ற ஒருவரோ வண்டிகள் ஏற்பாடு செய்வதும், வேட்பாளர், ஏஜெண்டு, வேட்பாளர் குடும்பத்தினர் ஆகியோர் தவிர மற்ற வாக்காளர்களுக்கு இலவச வண்டிகள் போக்குவரத்திற்காக அளிக்கப்படுவதும், 1951-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்படி ஒழுங்கீனமான முறையாகும். அத்துடன் இச்சட்டப் பிரிவு 133-ன் கீழ் ஆயிரம் ரூபாய் வரையில் அபராதம் விதிக்கக்கூடிய குற்றமுமாகும்.

இந்த ஒழுங்கீனத்தைத் தக்க முறையில் விரைவாகக் களைய, 1898-ம் ஆண்டு குற்ற இயல் நடைமுறை விதிகளின்கீழ் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். சட்டத்தை மீறி வாக்காளர்களுக்கு வண்டிகள் ஏற்பாடு செய்யப்படும் தகவல் அறியும் யாரும், அந்த வாக்காளர்கள் கொண்டுவரப்படும் வாக்குச் சாவடியில் தலைமை அதிகாரிக்கு அதைப் பற்றிப் புகார் செய்து, மாஜிஸ்திரேட்டுக்கு அவர் எழுத்து மூலம் முறையீடு செய்யுமாறு கேட்கவேண்டும்; அல்லது அவர்களே மாஜிஸ்திரேட்டுக்கு புகார் செய்யலாம்.

இந்த நடவடிக்கைக்குப் பிறகு வாக்காளர்களுக்குச் சட்ட விரோதமாக வாகன ஏற்பாடு செய்ததை, தேர்தல் ஆட்சேப மனுவில் ஒரு காரணமாகவும் உரிய காலத்தில் சேர்த்துக் கொள்ளலாம்.

"உடனே நடவடிக்கை எடுக்காமல், பின்னல் தேர்தல் கமிஷனுக்கோ அல்லது தேர்தல் அதிகாரிக்கோ முறையீடு செய்வது பலன் இல்லாமல் போகலாம். ஆகையினல், குற்றம் இழைக்கப்படுவதற்கான சான்றுகள் உடனடியாகக் கிடைக்கின்ற நேரத்திலேயே, அதை அப்பொழுதே தடுத்து நிறுத்த, குற்ற இயல் நடைமுறை விதிகளின்கீழ், குறறவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அனைவரும் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்" என்று தமிழக அரசின் செய்தித் துறைச் செய்திக் குறிப்பு அறிவிக்கிறது.

கழகத் தொழிற் சங்கச் சாதனை

சிங்காநல்லூர் காட்டன் சூபிலி ஆலையில், கிருஷ்ணன் என்கிற தொழிலாளிக்கு, 1967 டிசம்பர் மாதச் சம்பளத்தில் ரூ. 8 பிடித்தம் செய்யப்பட்டது.

இதுபற்றித் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் 1—1—68-ல் தொழிலாளர் துறை அதிகாரியின் முன்பு வழக்குத் தொடரப்பட்டு 6—1—68-ல் விசாரணை நடைபெற்றது.

தொழிற்சங்கச் சார்பில் பி. கருப்புசாமி, ஏ. வெங்கடாசலம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வழக்கின் இறுதியில் பிடித்தம் செய்யப்பட்டதைத் திருப்பித் தந்துவிடுவதாக நிர்வாகத்தினர் ஒப்புக்கொண்டனர்.

பின்தங்கிய நாடுகளை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் !

அறியாமையும் மக்கட்தொகையும் பெருகும் ஆபத்து !

ஐ. நா. பொருளாதார சமூகக் குழு அறிக்கையில் தகவல்

நியூயார்க், டிச. 31—

"உலகத்திலுள்ள முன்னேறிய நாடுகளுக்கும்—பின்தங்கிய நாடுகளுக்குமிடையே ஏற்றத் தாழ்வுகள் இன்னும் குறைந்தபாடில்லை; பொருளாதாரத் துறையில் இந்த நிலைமை 1967-லும் நீடித்தது; இந்த நிலைமை மாறுவதற்கு இன்னும் பலனுள்ள விதத்தில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப் படல் வேண்டும்.

"மக்கள்தொகைப் பெருக்கத்தைக் கவனிக்கும்போது, உணவுத் தானிய உற்பத்திகளின் வேகம் மிகவும் மேதுவாகவே இருக்கிறது; சில இடங்களில் சராசரி உற்பத்தி குறைந்தும் இருக்கிறது"

என்று ஐ. நா. பொருளாதாரக் கழகத்தின்முன் தாக்கல் செய்யப்பட்ட ஓர் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது; அவ்வறிக்கையி மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது :—

மரண விகிதம் குறைவு

"சில பகுதிகளில் போதுமான அளவுக்கு ஊட்டச் சத்துணவோ மருத்துவ வசதிகளோ இல்லை; இருந்தாலும், மரண விகிதம் பொதுவாகக் குறைந்திருக்கிறது; குறிப்பாகக் குழந்தை மரணம் குறைந்திருக்கிறது.

எழுத்தறிவற்ருேர் தொகை மேலும் உயருகிறது !

1960-க்கும் — 1965-க்குமிடையே உலகத்தில் எழுத்தறிவு இல்லாதவர்களின் தொகை 44.3 சதவிகிதத்திலிருந்து 39.3 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது; ஆனல், எழுத்தறிவில்லாதவர்களின் மொத்த எண்ணிக்கை 70 கோடியிலிருந்து 74 கோடியாக உயர்ந்திருக்கிறது !

மக்கட்தொகைப் பெருக்கம் ஏற்படுத்தும் விளைவு

பின்தங்கியுள்ள நாடுகள் சமாளிக்க வேண்டிய பிரச்சினைகள் எவ்வளவோ இருக்கின்றன. மக்கட்தொகைப் பெருக்கம் அவர்களுடைய தொல்லைகளை மேலும் மேலும் அதிகமாக்கி இருக்கிறது

1965 நடுவில் உலகத்தின் மக்கட்தொகை 829 கோடியாக இருந்ததென்று மதிப்பிடப்பட்டது; அதாவது 15 ஆண்டுகளில் சுமார் 78 கோடி அதிகம்.

1960-ல், மூன்று பேர்களில் இரண்டு பேர் பின்தங்கிய நாடுகளில் வசித்துக் கொண்டிருந்தார்கள்; ஆனல் 1980-ல் நான்கு பேர்களில் மூன்று பேர்கள் பின்தங்கிய நாடுகளில் இருப்பார்கள். இதற்காக குடும்பக் கட்டுப்பாடு முறைகள் தீவிரமாகச் செயல்பட்டுவருகின்றன; ஆனல், சில பின்தங்கிய நாடுகளில் இதற்கெனத் தேசியக் கொள்கை எதுவும் இல்லாததால், இத்துறையில் அவை முன்னேற்றம் காண முடியவில்லை.

பிறப்பு விகிதத்தைக் குறைப்பதற்கு 1960-க்கு முன்பு தேசிய கொள்கைகள் இருந்த நாடுகள் இந்தியாவும், பாகிஸ்தானும் தான் என்று சொல்லலாம்.

1964 முதல் 1966 வரையில், 12 நாடுகளில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் அமுலாக்கப்பட்டன.

பின்தங்கிய நாடுகளில் வேலை வாய்ப்புக்களை இன்னும் அதிகமாக்க வேண்டியது அவசியமாகும்."

'மேட்டுப்பாளையம் இரயில் பாதை நீடிக்க வேண்டும்'

தலைமையமைச்சருக்கு நாடாளு மன்ற உறுப்பினர் கடிதம்

கோவை, சன. 31—

"தமிழ்நாட்டிலுள்ள மேட்டுப்பாளையம் — உதகமண்டலம் இடையேயுள்ள இருப்புப் பாதையை எடுத்துவிட இறுதி முடிவு எடுப்பதற்கு முன் இத்தொடர் சம்பந்தமான எல்லா நிலைமைகளையும் விரிவாகப் பரிசீலனை செய்யவேண்டும்"

என்று மத்திய இரயில்வே அமைச்சரை, இந்தியத் தலைமையமைச்சர் கேட்டுக்கொண்டிருக்கிருர்.

"நீலகிரி மாவட்டத்திலுள்ள மலைவாசஸ்தலத்தை இணைக்கும் இந்த முக்கியமான இருப்புப் பாதையை அகற்ற வேண்டும் என்று எடுக்கப்படவிருக்கின்ற முடிவினைக் கைவிடத் தலைமையமைச்சர் தலையிட்டு ஆவன செய்ய வேண்டும்" என்று நாடாளுமன்ற சுதந்தரக் கட்சி உறுப்பினர் நஞ்சா கௌடர், தலைமையமைச்சருக்கு எழுதிய கடிதத்திற்குக் கிடைத்த பதிலிலிருந்து இத்தகவல் அறியப்படுகிறது.

"நீலகிரி பாதையை அகற்றிவிடும் முடிவை நிறைவேற்றத் துவங்கினல், நீலகிரி மக்கள், கிளர்ச்சியை மேற்கொள்வர்"

என்று நஞ்சா கௌடர் தெரிவித்திருந்தார்.

"இந்த மலைப்பாதையை, மைசூருடனும் கள்ளிக்கோட்டையுடனும் இணைத்துவிட்டால், நல்ல வருமானம் கிடைக்கும்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலட்சியங்கள் நிறைந்தது இந்தியா—சாதனைகள் நிறைந்தது சோவியத்!

நிபந்தனையற்ற முறையில் உதவும் இரஷ்யா நம்மிடம் எதிர்பார்ப்பது நட்புறவே!

முதலமைச்சர் அண்ணா விளக்கம்

குண்டூர், சன. 31—

இந்திய—சோவியத் நட்புறவின் வளர்ச்சிக்கு அருந்தொண்டு ஆற்றிய காலஞ்சென்ற பாலிகாவின் நினைவாக எழுப்பப்பட்ட 'டாக்டர் பாலிகா நகரில்' எட்டாவது 'இஸ்கஸ்' தேசிய மாநாடு துவங்கியது.

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா, சென்னையில் உள்ள சோவியத் கான்சல்-ஜெனரல் ஜி. ஐ. கவேரின், 'இஸ்கஸ்' தேசியக் குழு தலைவர் கே. பி. எஸ். மேனன், உஸ்மானியா பல்கலைக் கழகத் துணைவேந்தரும் ஆந்திர 'இஸ்கஸ்' மாநிலக் குழுத் தலைவருமான டாக்டர் டி. எஸ். ரெட்டி, உலக சமாதானக் குழுப் பொதுச் செயலாளர் இரமேஷ் சந்திரா, கே. டி. மாளவியா, அர்ச்சுன் அரோரா, மற்றும் பலர் மேடையில் அமர்ந்திருந்தனர்.

லெனின், பண்டித நேரு, லால் பகதூர் சாஸ்திரி, டாக்டர் பாலிகா ஆகியோரின் உருவப் படங்கள் மேடையை அலங்கரித்தன.

பல்லாயிரம் மக்கள் குழுமியிருந்த இந்த மாநாட்டுக்கு திரு. பி. எஸ். மேனன் தலைமை தாங்கினார்.

சோவியத் அரசின் 50 அற்புத ஆண்டுகளைக் குறிக்கும்வகையில், விண்வெளியில் 50 வாணங்கள் ஏவி விடப்பட்டன; அவை வெடித்தபொழுது, இந்திய—சோவியத் கொடிகள் விண்ணில் சஞ்சரித்தன; இந்தக் காட்சியை 25,000 மக்களும் கையொலி எழுப்பி வரவேற்றனர்.

இந்திய மக்கள்பால் சோவியத் மக்கள் கொண்டுள்ள அன்பையும் மதிப்பையும் பாராட்டிப் பேசிய திரு. மேனன் குறிப்பிட்டதாவது:-

"சோவியத் நாடு எல்லாப் பிரச்சினைகளிலும் இந்தியாவின் பாதுகாவலனாக விளங்குகிறது; குறிப்பாக, இந்தியாவின் பிரதேச உரிமைப் பிரச்சினையில் அது நமது காவலன் ஆகும்.

"இரஷ்யாவில் நடைபெற்ற மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியானது, சுதந்தரம்—சமாதானம் — உணவு ஆகியவற்றை மக்களுக்கு அளித்தது."

அறிஞர் அண்ணா

முதலமைச்சர் அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நான் இங்கு உரையாற்ற ஒப்புக்கொண்டபொழுது, ஒரு மண்டபத்தில் பேசுவேன் என்று நம்பினேன்; ஆனால், 25,000 பேருக்கு மேல் கூடியுள்ள மாநாட்டுப் பந்தலில் பேசுகிறேன்.

"இந்திய – சோவியத் நட்புறவின் மாபெரும் முக்கியத்துவத்தை மக்கள் உணர்ந்துள்ளனர் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

"இந்தியா என்பது—இலட்சியங்கள் நிறைந்த நாடு; சோவியத் யூனியன் என்பது—சாதனைகள் நிறைந்த நாடு; எனவே, சோவியத் யூனியன் நமக்கு வழிகாட்ட வேண்டும்.

"பிற நாடுகளின் வழிகாட்டலைக் கண்டு நாம் அஞ்சுகிறோம்; ஆனால் சோவியத் யூனியனின வழிகாட்டலைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை! சோவியத் மக்களின் வழிகாட்டல் என்பது தன்னலமற்றது!

"அக்டோபர் புரட்சியானது, 'மனிதனை மனிதன் சுரண்டாமல் வாழ முடியும்' என்ற போதனையை மனித குலத்திற்கு வழங்கியுள்ளது" என்று கூறினார்.

ஜார்ஜியக் குடியரசின் அயல்துறை அமைச்சர் கிகேஷ்விலி, சோவியத் மக்களின் அன்பார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துப் பேசினார்.

உலக சமாதானக் குழு பொதுச் செயலாளரான திரு. இரமேஷ் சந்திரா பேசுகையில், 'சோவியத் யூனியன் மாபெரும் சமாதானக் கோட்டையாக விளங்குவதால் தான் உலகப் போர் தவிர்க்கப்படுகிறது—மக்களின் சுதந்தரம் உறுதிப்படுகிறது' என்று கூறினார்.

எட்டாவது 'இஸ்கஸ்' தேசிய மாநாட்டுக்கு அலெக்சி கோசிகின் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் 'இந்திய – சோவியத் நட்புறவு, காலத்தின் சோதனைகளை வென்றுள்ளது' எனக் குறிப்பிட்டுள்ளார்.

குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன், தலைமையமைச்சர் இந்திரா காந்தி, உலகெங்கும் உள்ள சோவியத் நட்புறவுச் சங்கங்கள் ஆகியோரிடமிருந்து வாழ்த்துக்கள் வந்து குவிந்தன.

பொதுக்கூட்டம்

அன்று மாலையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இலட்சம் பேர் திரண்டிருந்தனர்; இந்தியாவில் லெனின் வாழ்க்கைச் சரிதத்தை முதன்முதலில் எழுதியவரும் பிரபல பத்திரிகையாளருமான திரு. ஜி. வி. கிருஷ்ணராவுக்கு அக்கூட்டத்தில் வாழ்த்துரை வழங்கப்பட்டது.

அப்பொழுது உரையாற்றிய திரு. கே. பி. எஸ். மேனன், 'லெனினது வழிகாட்டலால் சோவியத் யூனியன் மாபெரும் வெற்றிகளைப் பெற்றுள்ளது' எனக் கூறினார்.

சென்னை சோவியத் கான்சல்-ஜெனரலான திரு. ஜி. ஐ. கவேரின், வாழ்த்துரை வழங்குகையில் குறிப்பிட்டதாவது:—

"கடந்த இருபது ஆண்டுகளாக வளர்ந்துவரும் இந்திய – சோவியத் உறவுகளால் விசேடப் பயன் விளைந்துள்ளது; சோவியத் – இந்திய கலாசார உறவுகள் பல துறைகளில் முன்னேற்றம் அடைந்துள்ளன; இத்தகைய உறவுகளை வளர்ப்பதிலும், வலுப்படுத்துவதிலும் இந்திய – சோவியத் நட்புறவுக் கழகத்திற்கு முக்கிய இடமுண்டு."

வறுமையை ஒழிக்க— அண்ணா விளக்கம்

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நாம் சோவியத் மக்களிடமிருந்து நாம் எவ்வளவோ கற்றுக்கொள்ள வேண்டும்; உலகில் நிரந்தர சமாதானம் நிலவுமானால், சோவியத் யூனியன் மேன்மேலும் வளர்ச்சி பெறும்; இவ்வுலகிலிருந்து வறுமையை அடியோடு ஒழித்துக்கட்டும் என்பது திண்ணம்.

"சோவியத் யூனியன் நமக்குப் பல வழிகளிலும் உதவிவருகிறது; ஆனால், இவ்வுதவிகளுக்கு அது கொடிய நிபந்தனைகளை விதிக்கவில்லை!

"சோவியத் யூனியன், நம்மிடம் சதையையோ, பவுனையோ கேட்கவில்லை; அவர்கள் நம்மிடம் நட்புறவு பூணுகிறார்கள்—நட்புறவையே விரும்புகிறார்கள்; எனவே, இந்த வாய்ப்பினைப் பயன்படுத்த வேண்டும்; அவர்களது நட்புறவிலிருந்து முடிந்த அளவு பயன்பெற வேண்டும்."

தமிழ் வாழத் தமிழக அரசு செய்த முடிவு

பெரம்பூர் தமிழ்ப் பேரவை பாராட்டு

சென்னை-பெரம்பூர் தமிழ்ப் பேரவையின் செயற்குழுக் கூட்டம் 27—1—68-ல் நடைபெற்றபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துத் தாய்மொழியாம் தமிழ் மொழியின் உரிமையைக் காக்கத் தமது இன்னுயிர் ஈந்த வீர மறவர்களுக்கும், மற்றும் எண்ணற்ற இன்னல்களை ஏற்றுத் தியாகங்கள் பல புரிந்தவர்களுக்கும், தனது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

தமிழ்நாட்டு மக்களின் நீண்டநாளைய எண்ணங்களை நிறைவேற்றும் வகையிலும், தமிழ் மொழியின் வளர்ச்சி—பாதுகாப்பு ஆகியவற்றைக் கருதியும், 23—1—68 அன்று சட்டமன்றத்தில் தமிழக அரசு நிறைவேற்றியுள்ள தீர்மானங்கள் அனைத்தையும் வரவேற்பதோடு, அவை நிறைவேற்றப்படுவதற்கு உறுதுணையாக இருந்த ஏனையோரையும் குறிப்பாகத் தமிழக அரசையும் சிறப்பாக முதலமைச்சர் அண்ணா அவர்களையும் பாராட்டுவதுடன், தனது மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது.

தமிழக மாணவர்களின் விருப்பம் தமிழக அரசால் நிறைவேற்றப்பட்டுவிட்டபடியால் கல்வி நிலையங்கள் திறக்கப்பட்டதும், வகுப்புக்களுக்குத் திரும்புமாறு மாணவர்களைக் கேட்டுக்கொள்கிறது.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை சாதாரண மக்களும் பயன்பெறத்தக்க வகையில் சீரும் சிறப்பும் ஓங்க நடத்திய தமிழக அரசுக்குப் பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது.

வெள்ளித் திருப்பூரில் அமைச்சர் செ. மாதவன்

பவானி வட்டம் வெள்ளித் திருப்பூர் தி.மு.க. பொதுக்கூட்டம் 20—1—68-ல் புதிய பேருந்து நிலையத்தில் திரு. ஏ. எம். இராசா எம்.ஏ., எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது; திரு. டி. எம். டி. பெல்லி கொடியேற்றிவைத்தார்.

தி.மு.க. சார்பில் செயலாளர் தி. ப. அப்புசாமி, அமைச்சர் மாதவனுக்கு வரவேற்பிதழ் வாசித்துக் கொடுத்தார்.

பின், அமைச்சர் செ. மாதவன் கோபித் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் பி. ஏ. சாமிநாதன், அந்தியூர் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் ஈ. எம். நடராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்; டி. எம். செப்புசெல்லி நன்றி நவின்றார்.

சிதம்பரத்தில் சீரணிப் பணி

சிதம்பரம் நகரில் சுமார் 10 ஏக்கர் பரப்பளவுள்ள—நிலத்தாமரை, ஆகாயத்தாமரை முதலிய பூண்டுகளால் அடைபட்டு பாழ்பட்ட நிலையில் இருந்த பெரிய குளமான நாகச்சேரி குளத்தை துப்புரவு செய்யும் பணியில் 28—1—68 அன்று சிதம்பரம் நகரச் சீரணித் தொண்டர்களும், நகரப் பொதுமக்கள் பலரும் சேர்ந்து (சுமார் 200 தொண்டர்கள்) ஈடுபட்டு, சுமார் இருபது லாரிகளில் ஏற்றக்கூடிய நீர்ப்பூண்டுகளை குளத்திலிருந்து அகற்றினர்.

தொடர்ந்து 4—2—68 அன்றும் மேற்படி குளத்தில் பாக்கி தங்கியுள்ள நீர்ப்பூண்டுகளை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட சிதம்பரம் நகரச் சீரணித் தொண்டர்கள் முடிவு செய்துள்ளனர்.

இயங்கிக்கொண்டு வருகிறது.

20—1—68-ல் அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்களின் தொகுதிச் சுற்றுப்பயண நிகழ்ச்சிகள் முடிந்து அன்று இரவு அந்தியூர் பொதுக்கூட்டமும் சிறப்பாக நடைபெற்றது.

"காங்கிரசுக்காரர்கள் கழக வளர்ச்சிகண்டு பொறுமை கொண்டு இப்படிப் பொய்யான செய்தியை வெளியிட்டுள்ளனர்" என்று செயலாளர் அ. க. துரைராசு அறிவிக்கிறார்.

பொய்ச் செய்திக்கு மறுப்பு

காங்கிரசு நாளிதழ் ஒன்று வெளியிட்ட அந்தியூர் கிளைக் கழகத்தைப் பற்றிய செய்தி முழுவதும் பொய்யானது. அந்தியூர் தி.மு.க. கிளை மிகச் சிறந்த முறையில்

முரசொலி மாறனுக்குப் பாராட்டு

அமைச்சர் கோவிந்தசாமி கலந்துகொண்டார்

சென்னை 96-வது வட்டம் கலைஞர் பொதுப்பணி மன்றத்தின் சார்பில் வாக்காளர்களுக்கு நன்றியறிவிப்பும் — முரசொலி மாறன் எம்.ஏ., எம்.பி. அவர்களுக்குப் பாராட்டும் 21—1—68 மாலை 7 மணியளவில் திரு. எம். இலட்சுமய்யா (எஞ்சினீயர்) தலைமையில் நடைபெற்றது; வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள், மாறனைப் பாராட்டிப் பேசினார்.

தோழர்கள் எம். கோபால் எம்.எல்.ஏ., எம்.சி, சைதை சம்பந்தம் எம்.சி., சற்குணம், எம். குமார், இந்திராணி, வட்டச் செயலாளர் மா. நா. செயந்திரன், இலட்சுமணன், புதூர் டி. ஆர். செயராமன் ஆகியோரும் பேசினர்.

முரசொலி மாறனுக்கு, தோழியர் இந்திராணி வரவேற்பிதழ் வாசித்தளித்தார். பொதுமக்களும் கழகத் தோழர்களும், கைத்தறித் துண்டுகளும் மலர் மாலைகளும் அணிவித்தனர்.

வரவேற்புக்கு நன்றி தெரிவித்து முரசொலி மாறன் உரையாற்றினார்.

புதுமை மணம் புரிந்துகொண்ட புரட்சித் தம்பதிகள்

அறிஞர் அண்ணா தலைமையில் பாராட்டு விழா

சென்னை, சன. 31—

குடந்தை நகர திராவிடர் கழகச் செயலாளரான திரு. மாரிமுத்து அவர்களின் மகள் திருமதி செயலட்சுமிக்கும்—பஞ்சாபைச்சேர்ந்த டி. சி. மொங்கோ (கல்கத்தா இந்துஸ்தான் மோட்டார்ஸ் நிறுவனத்தின் துணை விற்பனை நிர்வாகி) என்பவருக்கும் நடைபெற்ற திருமணத்தையொட்டி, அசோகா விடுதியில் ஒரு பாராட்டு விழா நடைபெற்றது.

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் இந்த விழாவுக்குத் தலைமை வகித்தார்கள்.

திராவிடர் கழகத் தலைவர் பெரியார் அவர்களும் இவ்விழாவில் கலந்துகொண்டு பாராட்டி வாழ்த்தினார்கள்.

கீவ்ராஜ் மோட்டார் நிறுவனத்தின் தலைவர் திரு. கீவ்ராஜ் சோடியா, இந்தப் பாராட்டு விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்.

அண்ணா தமது தலைமையுரையில், 'ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையின் மூலமே இந்தியா ஒன்றுபட முடியும் என்றும், வடக்கும்—தெற்கும் இணைவதற்கு இந்தத் திருமணம் சிறந்த எடுத்துக்காட்டு என்றும், இப்படிப்பட்ட திருமணங்கள் அன்றாடம் பல நடைபெறும் நிலை வர வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள்.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் பேசுகையில், இத்தகைய திருமணங்களின் மூலம்தான் நாடு இயற்கையாகப் பிணைந்திருக்க முடியும் என்றும், அவ்வாறு ஏற்படாத பிணைப்பு பலாத்காரமானபிணைப்பே ஆகும் என்றும் குறிப்பிட்டார்கள்.

காங்கிரசு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி. செங்கல்வராயனும் மணமக்களைப் பாராட்டிப் பேசினார்.

பாராட்டுக்கு மணமக்கள் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

துவக்கத்தில் திரு. பரஸ்மல் லோடா வரவேற்றார்.

இறுதியில் ஹன்ஸ்ராஜ் கோத்ரா நன்றி தெரிவித்தார்.

ஐம்பத்தாறு வயதுடைய திரு. மொங்காவும் — 42 வயதுடைய திருமதி செயலட்சுமியும் செய்துகொண்ட இத்திருமணம் புதுமையான – புரட்சிகரமான கலப்புத் திருமணமாகும்.

தமிழக அரசின் மொழி தீர்மானம்

மதுரை நகர மக்கள் கல்விக் கழக வரவேற்பு

மதுரை, சன. 31—

மதுரை நகர மக்கள் கல்விக் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் சன. 28-ல், திண்டுக்கல் சாலை எஸ்.டி.சி. கட்டிடத்தில் நடைபெற்றது; திரு. தர்மராஜ் சந்தோஷம் தலைமைதாங்கினார்.

கூட்ட ஆரம்பத்தில் காலஞ்சென்ற தமிழறிஞர் டாக்டர் அ. சிதம்பரநாதனார் மறைவு குறித்து இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பேராசிரியர் சங்கரநாராயணன், கடந்த கூட்டம் பற்றிய குறிப்புக்களை வாசித்துவிட்டு, கழகம் இதுவரை செய்துள்ள வேலைகள் பற்றியும், வரவு–செலவுக் கணக்குகள் பற்றியும் அறிக்கை அளித்தார்.

அடுத்து, தமிழகச் சட்டமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட மொழி பற்றிய தீர்மானத்தின் மீது உறுப்பினர்களின் விவாதத்திற்குப் பின் கீழ்க்காணும் தீர்மானம் நிறைவேற்பட்டது:—

"அண்மையில் நடந்த தமிழகச் சட்டமன்றத்தில் மொழிப் பிரச்சினை பற்றி ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தை இக்கூட்டம் பொதுவாக வரவேற்கிறது; மும்மொழித் திட்டத்தை நீக்கிவிட்டு இரு மொழித் திட்டத்தைக் கொண்டுவந்தமைக்கு தமிழக அரசைப் பாராட்டுகிறது. ஐந்து ஆண்டிற்குள் தமிழைக் கல்லூரிகளில் பயிற்சி மொழியாக்கத் திட்டமிடுவதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது; 'அரசாங்கம் நடத்தும் கல்லூரிகளில் தமிழே பயிற்சி மொழி என்ற முடிவு சாலச் சிறந்தது' எனக் கருதுகிறது.

தனியார் நடத்தும் கல்லூரிகளிலும் பொதுவாகத் தமிழைப் பயிற்சி மொழியாக ஏற்றுக்கொள்ளும்படி தமிழகத்திலுள்ள எல்லாக் கல்லூரி நிர்வாகங்களையும் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது. சிறப்புத் தேவைகளை முன்னிட்டு ஒரு சில தனியார் கல்லூரிகளில் ஆங்கிலப் பயிற்சி மொழிப் பரிசுகளும் நடத்த வேண்டுமென தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறது.

இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களிலும் நம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பிற்கு உதவியாக மற்ற இந்திய மொழிகளும் விருப்பப் பாடமாகப் பள்ளிக்கூட நேரமல்லாத மற்ற நேரத்தில் கற்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமெனத் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறது.

மாறியுள்ள சூழ்நிலையில் கல்லூரிகளையும், பள்ளிகளையும் உடனடியாகத் திறக்க வேண்டுமென்றும், மாணவர்கள் கல்வி நிலையங்களுக்குச் சென்று முழு ஆர்வத்துடன் கல்வி பயில வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிற்து.

மத்திய அரசு இன்று இந்தி வளர்ச்சிக்கு மட்டும் நிதி வழங்குவதை நிறுத்திவிட்டு, இந்திய மொழிகள் எல்லாவற்றின் வளர்ச்சிக்கும் சமமாக நிதி ஒதுக்க வேண்டுமென மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறது.

மாற்றுக்கட்சிக் காலிகள் அட்டகாசம்!

கமுதி, சன. 30—

கமுதியை அடுத்துள்ள பூக்குளம் என்னும் ஊரில் சன. 28-ஆம் நாள் இரவு சிவாஜி-கணேசன் மன்றத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் பொங்கல் விழா நடத்த ஏற்பாடு செய்யும்சாக்கில் நள்ளிரவில் தி.மு. கழகக் கட்டிடத்திற்குள் புகுந்து அங்கிருந்த அண்ணா, எம். ஜி. ஆர். படங்களை நொறுக்கினர்; அண்ணாவின் பெரிய உருவப் படத்தில் மையால் கோலமிட்டு அலங்காரம் செய்தனர்; கழக ஏடுகளைச் சூறையாடிச் சென்றனர்; கட்டிடத்தில் விரித்திருந்த பாயைக் கிழித்தெறிந்தனர்; தாங்களும் தமிழர்கள்தான் என்ற உணர்வுகூட இல்லாமல் கழகக் கட்டிடத்தில், 'தமிழ் ஒழிக', 'இந்தி வாழ்க' என எழுதி வைத்துச் சென்றிருக்கின்றனர்.

நடக்கஇருப்பவை: பொதுக்கூட்டங்கள்

3--2--68

வேடசந்தூர்

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு மாரியம்மன் கோயில் திடலில்; தலைவர்: வி. நாகசுந்தரம்; பேசுவோர்: கா. காளிமுத்துபி.ஏ., ப. முத்துசாமி பி.ஏ., பி.எல்., நெல்லை மாறன், பொன். சீனிவாசன்.

திருச்சி

தி.மா.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு கிருஷ்ணபுரம் சாலையில்; தலைவர்: இரா. சீனிவாசன்; பேசுவோர்: அன்பில் தர்மலிங்கம், எம். எஸ். மணி எம்.எல்.ஏ., ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., கே. எஸ். அப்துல் வகாப் எம்.எல்.ஏ., ஏ. நடராசன், வி. கிருட்டினமூர்த்தி, புலவர் இளஞ்செழியன், மற்றும் மாணவத் தோழர்கள்.

குடந்தை

வள்ளுவர் படிப்பகச் சார்பில் மாலை 6 மணிக்கு ஏ. ஆர். இராமசாமி சாலை செட்டி புதுத் தெருவில்; தலைவர்: வி. நா. நாகேந்திரன்; பேசுவோர்: நன்னிலம் நடராசன், எஸ். ஆர். இராதா எம்.சி., ப. கோதண்டபாணி, சீ. பா. இரங்காச்சாரி, டி. என் மனோகரன்.

வேளச்சேரி

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு செங்குந்தர் தெருவில்; தலைவர்: டி. செகநாதன்; பேசுவோர்:: முரசொலி மாறன் எம்.ஏ., எம்.பி., வேலூர் நாராயணன் எம்.ஏ.பி.எல்., எம்.சி., நா. கணபதி பி.எஸ்சி., பி.எல்., சி. சுப்பையா, சி. இராமலிங்கம், எஸ். பாலன், தி. தா. சங்கர், பசுபதி, துரைக்கண்ணு, ஜே.கே. செல்வராசன்.

4--2--68

செங்கற்பட்டு

தி. மு. கழகச் சார்பில் மாலை 6 மணிக்கு சின்னகடைத் தெருவில்; தலைவர்: வரதன்; பேசுவோர்: சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., செ. கோ. விசுவநாதன் எம்.எல்.ஏ., பசுபதி. பலராமன், மற்றும் பலர்.

சிவகாசி

பட்டிவீரன்பட்டி சவுந்தரபாண்டியனார் நினைவு மன்றத் திறப்புவிழா; இரவு 7 மணிக்கு தெப்பத் திடலில்; தலைவர்:. எஸ். எம். பொன்னுசாமி; பேசுவோர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., ச. அமுதன் பி.ஏ., மற்றும் பலர். (மாலை 4 மணிக்கு அ. வேலாயுதம் தலைமையில் ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்கள், மன்றத்தைத் திறந்துவைப்பார்;

தண்டுரை—பட்டாபிராம்

நகர தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு பட்டாபிராம் சத்திரத்தில்; தலைவர்: ரா. நேசன்; பேசுவோர்: சட்டப் பேரவைத் தலைவர் சி.பா. ஆதித்தனார், டி. இராசரத்தினம் எம.எல்.ஏ., பி. சிவசங்கரன் எம்.பி., பி. சின்னசாமி, நாவளவன் பி.எஸ்சி., வழக்கறிஞர் எஸ். கே. பாலசுப்பிரமணியம், க. மு. பாபு, செ. பெருமாள்.

கண்ணம்பாளையம்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; பேசுவோர்: க. அன்பரசு, அத்தானி பாபு, மே. சி. தூயமணி, சோ. கு. பழனிசாமி, இரா. முருகேசன், மற்றும் பலர்.

சிவகாசி

மஜீத் நினைவு மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு பாவாடித் தோப்புத் திடலில்; தலைவர்: அ. வேலாயுதம்; பேசுவோர்: காட்டூர் கோபால், எஸ். பி. மணியம், எஸ். ஏ. ரசாக், ஏ. துரைக்கண்ணன், கே.வி.கே. இராசன், பழனிச்சாமி, அபுதாலிப்.

பந்தநல்லூர்

அண்ணா படிப்பகத் திறப்பு விழா; மாலை 6 மணிக்கு கடைத் தெருவில்; தலைவர்: பொன். தருமன்; திறப்பாளர்: வழக்கறிஞர் ச. கோதண்டராமன்; பேசுவோர்: சு. பத்மநாபன், என். அசோகரன், பி. ஏ. லிங்கன், கே. கே. குஞ்சிதபாதம், என். ரெங்கசாமி.

மதுரை

எம். ஜி. ஆர். எழு ஞாயிறு மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு பழைய மாகாளி பட்டுரோடு தெற்கு வெளி வீதியில்; தலைவர்: நா. இராமலிங்கம்; பேசுவோர்: கா. காளிமுத்து பி.ஏ., நா. காமராசு எம்.ஏ., கே.எஸ். சந்தானம, கூடலரசன், மதுரைவீரன், மு. செல்லம், மற்றும் பலர்.

புதுவை

18-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு ஒதியஞ்சாலைத் திடலில்; தலைவர்: மா. இராமமூர்த்தி; பேசுவோர்: வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., இரெ. இளம்வழுதி எம்.ஏ. பி.எல்.,எம்.எல்.ஏ., இ. குபேர் எம்.எல்.ஏ., எம். ஏ. சண்முகம், எம். சண்முகம் எம்.எல்.ஏ., கி. கோவிந்தராசன்.

திருவரங்கம்

13-வது வட்ட மனோகரன் மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு தாமோதர கிருஷ்ணன் கோயில் தெருவில்; தலைவர்: க. இராசவேலு எம்.ஏ.பி.எல்.; பேசுவோர்: இரா. சனார்த்தனம், ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., பெ. நடேசன், எஸ்.எம்.வி. சாமி, மு. நடராசன், பொன்னுசாமி.

திருவல்லிக்கேணியில் தீ விபத்து

அமைச்சர்கள் பார்வையிட்டு ஆறுதல் கூறினர்

சென்னை, சன. 31—

திருவல்லிக்கேணி கடற்கரை எதிரிலுள்ள அயோத்தியா குப்பத்தில் நேற்று நள்ளிரவு 11-45 மணியளவில் தீவிபத்து ஏற்பட்டு, தீயணைப்புப் படையினர் வந்து தீயை அணைத்தனர். மொத்தம் 4 குசைகள் சாம்பலாயின. தீ மேலும் பரவாமல் தீயணைப்புப் படையினர் காத்தனர்.

அந்த நேரத்தில் வெளியூர் கூட்டத்தை முடித்துக்கொண்டு அந்த வழியே சென்ற அமைச்சர் திரு. முத்துசாமியும், மாநகராட்சி உறுப்பினர் திரு. சா. கணேசனும், இதனையறிந்து பாதிக்கப்பட்ட இடத்தைப் பார்வையிட்டு, பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல் கூறினர்.

இரா. நெடுஞ்செழியன்

அயோத்தியாக் குப்பத்தில் தீ விபத்துக்குள்ளான இடத்தை இன்று அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சென்று பார்வையிட்டார். அவருடன் சுதந்தராக் கட்சித் தலைவர் சா. கணேசனும் சென்றிருந்தார். பகுதிக் கழகச் செயலாளர் வட்டச் செயலாளர், மாநகராட்சி உறுப்பினர், மற்றும் கழகத் தோழர்கள் உடனிருந்தனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமைச்சர் ஆறுதல் கூறினார்.

காயிதே மில்லத் இல்லம் திரும்பினார்

சென்னை, பிப். 2—

கார் விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த முஸ்லீம் லீக் தலைவர் காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் அவர்கள், நலமுடன் இல்லம் திரும்பினார்.

திருமண அழைப்பு

அன்புடையீர், வணக்கம்; நிகழும் பிலவங்க ஆண்டு தைத் திங்கள் 21-ஆம் நாள் (4—2—68) தமிழக முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில்,

எனது மகள் செல்வி: மதுரத்துக்கும்

வரதராசபுரம் திரு. பீமப்பிள்ளை அவர்களின் மகன்
செல்வன்: பெருமாளுக்கும்

சென்னை-இராயப்பேட்டை, லாயிட்ஸ் சாலை, 37-எண்ணுள்ள 'நல்வாழ்வு' திருமண மண்டபத்தில் நடைபெறும் திருமணத்திற்கு, அன்பர்கள் அனைவரும் தவறாது வருகை தந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

தங்கள் அன்பன்,

எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ.

நிகழ்ச்சி நிரல்:

3—2—68 மாலை 7 மணி: மணமகன் அழைப்பு

4—2—68 காலை 9 மணி: திருமணம்: மாலை 6 மணி: நாட்டிய நிகழ்ச்சி
குமாரி பத்மா சுப்பிரமணியம் எம்.ஏ.
(டைரக்டர் கே. சுப்பிரமணியம் மகள்)

குழுக் கூட்டம்

"சாத்தூர் நகர தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம், 4—2—68 காலை 9-மணிக்கு சாத்தூர் பயணிகள் விடுதியில் எஸ். பி. மணியம் தலைமையிலும்—திரு. ச. பழனியப்பன பி.ஏ. முன்னிலையிலும் நடைபெறும்" என்று, வட்டச் செயலாளர் அறிவிக்கிறார்.

சென்னை மாணவர் மன்றத் தேர்வுகள் தள்ளிவைப்பு

"அண்மையில் நடைபெறவிருந்த போட்டித் தமிழ்த் தேர்வுகள் தள்ளிவைக்கப் பெற்றுள்ளன.

"பள்ளி இறுதி வகுப்புத் தமிழ்த் தேர்வுகள் மார்ச் 2-ந்தேதியன்றும் கல்லூரித் தமிழ்த் தேர்வுகள் மார்ச் 16, 18 ஆகிய இருநாட்களிலும் முறையே நடைபெறும்" என, மன்றச் செயலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

பிப். 3, 4: சென்னை
5: மாயூரம்
6: மணப்பாறை

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

பிப். 4: செங்கற்பட்டு; 7: ஈரோடு; 8: சென்னிமலை; 9, 10: சென்னை; 11: தூத்துக்குடி; 13: சென்னை 35-வது வட்டம்; 14: சென்னை 84-வது வட்டம்; 18: திண்டுக்கல்; 20: கல்லாவி; 21: கந்திலி; 24: நெல்லிகுப்பம்; 25: செம்பட்டு.

முருகுபாண்டியன்

கலை நிகழ்ச்சிகள்

பிப். 3: குடந்தை; 4: திருச்சி; 5: எரியோடு; 6: சாலைபுதூர்; 7: புதுக்கோட்டை; 8: கரம்பக்குடி; 9: பெருங்கடம்பனூர்; 11: பி. புதூர்; 15: திருமங்கலம்; 16: அன்பில்; 17: கொங்கணாபுரம்; 18: நெறிஞ்சிப்பேட்டை; 19: மாதன்குப்பை (மேட்டூர்); 20: அரச்சலூர்; 24: திருகண்டேசுவரம்; 25: பாண்டிச்சேரி; 26: சிறுமதுரை; 27: விளந்தை.

மணி--சாமி குழுவினர்

கலை நிகழ்ச்சிகள்

பிப். 14: சுந்தரப் பெருமாள் கோயில்; 15: ஒவர்சேரி; 16: நாச்சியார்கோயில்; 17: திருவானைக்காவல்; 18: திருவரங்கம்; 19: திருப்பாத்துரை; 20, 21, 22: சேலம் பகுதி; 23: சங்கிலியாண்டபுரம்.

கா. காளிமுத்து

சுற்றுபபயணம்

பிப். 3: மதுரை; 4: போடி, மதுரை; 10: திருப்புவனம்; 11: பார்த்திபனூர்; 18: கோவில்பட்டி, பழையபேட்டை (நெல்லை); 25: சுரண்டை; மார்ச் 3: தச்சநல்லூர்.

முகவரி:

கா. காளிமுத்து,
பொறுப்பாளர்,
தென் மாவட்டத் தி.மா.மு.க.,
அம்பாசிடர் விடுதி,
மதுரை-1.

ஒத்திவைப்பு

5—2—68 அன்று நடைபெறவிருந்த மாயூரம் நகர தி. மு. க. பொது உறுப்பினர்கள் கூட்டம், ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று வட்டச் செயலாளர் எஸ். கணேசன் அறிவிக்கிறார்.

கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்கும் அரசு இது

இதன் கரங்களை வலுப்படுத்துவதே மாணவர் கடமை

கிளர்ச்சி நோக்கத்தை விடுத்து படிப்பில் கவனம் செலுத்திடுக

'தினமணி' (பிப். 2) இதழில் 'மாணவர்கட்கு' என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள தலையங்கத்தின் முக்கியப் பகுதிகள் வருமாறு:

"இந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து சனவரி 12-ந் தேதியன்று மூடப்பட்ட கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள், பிப்ரவரி 5-ந் தேதியன்று திறக்கப்படுமென்று மாநிலக் கல்வி மந்திரி அறிவித்துள்ளார். மந்திரியின் இந்த அறிவிப்பைத் தமிழ்நாட்டிலுள்ள எல்லாப் பெற்றோர்களும் மனமார வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை.

வருடாந்திரப் பரீட்சை நெருங்கிக்கொண்டிருக்கும் சமயத்தில் இருபத்தைந்து நாட்கள் மாணவர்களுக்கு வீணாகிவிட்டன; பள்ளிகளில் பாடம் நடக்கவில்லை என்பதுடன், இந்த நாட்களை மாணவர்கள் பரீட்சைக்குத் தயார் செய்து கொள்வதிலும் செலவிடவில்லை; கிளர்ச்சியின் நோக்கம் எவ்வளவு நியாயமானதாக இருந்தாலும் நஷ்டமடைந்தவர்கள் மாணவர்கள்தான்; இதை அவர்கள் காலாகாலத்தில் உணர வேண்டுமென்று விரும்புகிறோம்.

மொழிப் பிரச்சினையில் எதிர்காலப் பிரஜைகளான மாணவர்களுக்கு அதிக அக்கறை உண்டு என்பது உண்மைதான். ஆட்சி மொழி பற்றித் தங்களுடைய நிலை என்ன என்பதை அவர்கள் சந்தேகத்துக்கிடமில்லாத வகையில் காட்டிவிட்டார்கள்.

மொழி விஷயத்தில் இப்போதுள்ள தமிழக சர்க்கார் உறுதியுடன் நடந்துகொள்ளுவார்கள் என்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம். மத்திய சர்க்கார் இப்போது உருவாக்கியுள்ள மொழி ஏற்பாட்டைத் தாம் ஏற்கவில்லை என்பதையும் மாநில சர்க்கார் தெளிவாக்கி விட்டது; ஆட்சி மொழிச் சட்டத் திருத்தத்திற்கு முன்பு இருந்த நிலைமையே மேலும் நீடிக்கலாமென்றும், இந்த விஷயத்தில் இப்போது அவசரத்திற்கு அவசியமே இல்லையென்றும் முதன் மந்திரி கூறியிருக்கிறார்.

ஆட்சிமொழிச் சட்டத் திருத்தமும் அதனுடன் தீர்மானம் நிறைவேற்றியதும் அவசரப்பட்டுச் செய்த காரியம் என்பதை மத்திய சர்க்கார் தலைவர்களே உணர ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. இந்த விஷயத்தில் ஒரு பொதுக் கருத்தை உருவாக்குவதற்கு முயற்சிகள் செய்யப்படுகின்றன.

ஆட்சிமொழிப் பிரச்சினைக்கு நேர்மையான ஒரு தீர்வு காண்பதற்குப் பெரியவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறார்கள் என்பது தெளிவு. இந்த முயற்சிகளுக்கு ஏற்ற சூழ்நிலையைத் தோற்றுவிக்க வேண்டியது அவசியம். இதில் மாணவர்களுக்குப் பெரும் பொறுப்பு உண்டு. அவர்களுடைய கோரிக்கைக்குச் செவி சாய்க்காத சர்க்காராயிருந்தால், கிளர்ச்சிக்கு நியாயம் இருக்கலாம்; ஆனால், மொழிப் பிரச்சினையில் சர்க்கார் உறுதியுடன் நடந்துகொள்ளும்போது, அவர்களுடைய கரங்களைப் பலப்படுத்துவதுதான் மாணவர்களின் கடமையாகும். சர்க்காரை தர்மசங்கடமான நிலைமையில் வைப்பது தமது நலன்களுக்கு உகந்ததல்லவென்பதை மாணவர்கள் உணர்ந்து நடப்பார்களென்று நம்புகிறோம்.

இந்தப் பிரச்சினையில் பெரியவர்கள் அக்கறை எடுத்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள் என்ற நம்பிக்கையில், பிப்ரவரி 5-ந்தேதி முதல் மாணவர்கள் பழைய மனப்பான்மையை அடியோடு மறந்து, தமது படிப்பில் முழுக் கவனம் செலுத்த வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறோம்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.